


15.10. 2024

தலைப்புச் செய்திகள்

1. செயற்கை நுண்ணறிவு முறையாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் இன்று தொடங்கியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

3. வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாநிலத்தில் 931 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதாக, துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாமின் 93ஆவது பிறந்த தினத்தை ஒட்டி அவரது நினைவிடத்தில் ஏராளமானோர் இன்று அஞ்சலி செலுத்தினர்.

5. டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகளில் லக்ஷயா சென், பி.வி.சிந்து இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

செயற்கை நுண்ணறிவை முறையாக பயன்படுத்துவதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச தொலை தொடர்பு தர நிர்ணய கூட்டத்தில் இன்று உரையாற்றிய பிரதமர், தொலைதொடர்பு துறையில், நம் நாட்டின் கைபேசி கூட்டமைப்பு முக்கிய அங்கம் வகிப்பதாக குறிப்பிட்டார்.

தொலைதொடர்பு தொழில்நுட்பங்களில் நம் நாடு முன்னோடி நாடாக திகழ்வதாக கூறிய அவர், உலகளாவிய மின்னணு பரிவர்த்தனைகளில் 40 சதவிகிதத்திற்கும் மேல் நம் நாட்டில் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் கடை கோடி மக்களையும், சென்றடையும் சாதனமாக மின்னணு தொடர்பு திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

குறைந்த விலை, அனைத்து பகுதிகளுக்கும் இணைப்பு, மலிவு விலையில் தரவுகள், மின்னணுவிற்கு முன்னுரிமை என்ற 4 அம்சங்கள் தொலை தொடர்பு துறையின் முக்கிய தூண்களாக திகழ்கிறது என்றார்.

நம் நாடு 6ஜி தொழில்நுட்பத்தை நோக்கி வேகமாக நடைபோடுவதாக கூறிய பிரதமர் தொலை தொடர்பு துறையில் புதுமைகளும் சீர்திருத்தங்களும் மிகப்பெரிய சாதனையாக உருவெடுத்துள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வங்ககடலில் இரண்டு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதிகள் காரணமாக, தமிழ்நாட்டில் அடுத்த இரண்டு நாட்களில் கனமுதல் அதி கன மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியதாக இம்மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

கடல் அலைகள் அதிக உயரத்திற்கு எழக்கூடும் என்பதால், கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்களும், சுற்றுலா பயணிகளும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாநில பேரிடர் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது,

மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மழையின் தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்கள் 1913 என்ற இலவச தொலைபேசி எண்ணில் புகார்களை தெரிவிக்கலாம் என அரசு கூறியுள்ளது.

24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் செயல்பட்டு வருவதையடுத்து, புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று கன மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் வட கடலோர மாவட்டங்களில் மழையின் தாக்கம் அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வங்க கடலில் நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைந்து வட தமிழகம் புதுச்சேரியை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தெற்கு ஆந்திராவில் வங்க கடலுக்கு அப்பால் புதிய வளிமண்டல சுழற்சி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் யானைகவுணி, புளியந்தோப்பு பகுதிகளை இன்று நேரில் ஆய்வு செய்தார்.

மழைநீர் அகற்றும் பணிகளை ஆய்வு செய்த முதலமைச்சர், பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

தூய்மை பணியாளர்கள் மாநகராட்சி ஊழியர்கள் உள்ளிட்டோர் முனைப்புடன் பணியாற்றிவருவதாக முதலமைச்சர் பாராட்டினார்.

இதனிடையே பொதுமக்களின் தேவைக்காக கூடுதல் மெட்ரோ ரயில் போக்குவரத்து சேவைகள் இயக்கப்படுகின்றன.

பெரம்பூர், கணேசபுரம் உட்பட 5 சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழு

உதயநிதி ஸ்டாலின்

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னையில் 300 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதாக, துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மாநில பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு மையத்தை இன்று ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 631 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

சாலைகளில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெறுவதாகவும், தண்ணீர் தேங்கா வண்ணம் நிவாரண பணிகள் முடுக்கிவிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

- -வாய்ஸ் - -

ழுழுழுழுழுழுழுழுழு

அன்பில் மகேஷ் பொய்யாமொழி

தமிழ்நாட்டில் மழை காரணமாக விடுமுறை அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் இணையவழி வகுப்புகளை தவிர்க்க மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுறுத்தியுள்ளார்.

கன மழை சூழலில் மாணாக்கர் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்பதால் இணையவழி வகுப்புகளை ஒத்திவைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழு

அப்துல் கலாம்

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாமின் 93ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் பேக்கரும்பில் அன்னாரது நினைவிடத்தில் ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜித்சிங் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள சமூகவலைதள பதிவில் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய கலாமின் எண்ணங்களும் தொலைநோக்கு பார்வையும் உறுதுணையாக இருக்கும் என்றார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள சமூகவலைதள பதிவில் இளைஞர்களிடையே ஊக்கத்தை ஏற்படுத்தியவர் கலாம் என்று புகழாரம் சூட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழு

சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் மழைக்கால மருத்துவ முகாம்களில் டைஃபாய்டு போன்ற காய்ச்சல்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மழைக்கால மருத்துவ முகாமை இன்று தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் சென்னையில் 100 இடங்கள் உட்பட ஆயிரம் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெறுவதாக கூறினார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழு

மழை இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பல்வேறு பகுதிகளில் சாலைகளில் நீர் தேங்கியுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

பள்ளிக்கரணை மேம்பாலத்தில் பொதுமக்கள் வாகனங்களை நிறுத்த தடை இல்லை என்றும், காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகே மரம் சரிந்து விழுந்ததை அடுத்து தாம்பரத்திலிருந்து சென்னை கடற்கரை சென்று கொண்டிருந்த மின்சார ரயில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

பாதை சீரமைப்புக்கு பின் ரயில் போக்குவரத்து தொடங்கியது.

ழுழுழுழுழுழுழுழுழு

கடல் சீற்றம்

மயிலாடுதுறை, செங்கல்பட்டு, நாகை மாவட்டங்களில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் மீனவர்கள் இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் கடற்கரையோரம் வசிப்பவர்கள் உரிய முன்னெச்சரிக்கையுடன் இருப்பதோடு படகுகளை பாதுகாப்பான இடங்களில் நிறுத்துமாறு ஆட்சித்தலைவர் திரு.கார்த்திகேயன் அறிவுறுத்தியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

செந்தில்பாலாஜி

கோவை சிங்காநல்லூரில் மழை பாதித்த பகுதிகளை மாநில மின்துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி இன்று நேரில் ஆய்வு செய்தார்.

அப்பகுதிகளில் வாய்க்காலில் தேங்கியிருக்கும் குப்பைகளை அகற்றும் பணிகளை பார்வையிட்டதோடு, பொதுமக்களின் குடியிருப்பு பகுதிகளையும் ஆய்வு செய்தார்.

ழுழுழுழுழுழுழுழுழு

மழை மாவட்டங்கள்

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர், மாரப்பம்பாளையம், பள்ளாபாளையம் கிராமங்களில் 20க்கும் மேற்பட்ட வீடுகளில் மழை நீர் புகுந்ததை அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறை பூண்டி கோட்டூர் பகுதிகளில் மழை முன்னேற்பாடுகளை மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் காயத்திரி இன்று ஆய்வு செய்தார்.

இரண்டாயிரம் கிலோ மீட்டர் நீள நீர் நிலைகள் தூர்வாரப்பட்டுள்ளதால் எவ்வித சவாலையும் எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார்நிலையில் உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சாரூஸ்ரீ கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

கட்டுப்பாட்டு மையம்

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு மையத்தை ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மழை பாதிப்புகள், தொலைபேசி அழைப்புகள் குறித்து கேட்டறிந்ததோடு மழைக்கால பணிகளை விரைந்துமேற்கொள்ள அறிவுறுத்தினார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை புகார்களை தெரிவிக்க 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை இயங்குவதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஷ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

கன்னியாகுமரி மழை

கன்னியாகுமரியில் மழை காரணமாக பேச்சிப்பாறை அணையிலிருந்து கோதையாற்றில் உபரி நீர் திறந்துவிடப்படுவதால் திற்பரப்பு, தாமிரபரணி, பரளி ஆற்றில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

காவிரி டெல்டா பாசன பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 500 கனஅடியாக இன்று குறைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவும் 300 கன அடியாக குறைக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல்

மகராஷ்டிரா, ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தல்களுக்கான தேதிகளை தேர்தல் ஆணையம் இன்று பிற்பகல் வெளியிடுகிறது.

புதுதில்லி விஞ்ஞான்பவனில் தேர்தல் ஆணையர்கள் அட்டவணையை வெளியிடுகிறார்கள்.

மகராஷ்டிர சட்டப்பேரவையின் காலம் அடுத்த மாதம் 26ஆம் தேதியும்,

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவையின் காலம் வரும் ஜனவரி 5ஆம் தேதியும் நிறைவடைய உள்ளது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழு

ராஜீவ்குமார்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 100 சதவிகிதம் நம்பகதன்மை வாய்ந்தது என்றுதலைமை தேர்தல் ஆணையர் திரு.ராஜீவ்குமார் இன்று உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

கடலோர காவல்படை

இந்திய கடலோர காவல்படையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறை நடைமுறைபடுத்தப்படும் என்று கடலோர காவல்படையின் தலைமை இயக்குனர் திரு.பரமேஷ் சிவமணி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று கடலோர காவல்படையின் தலைமை இயக்குனராக பதவி ஏற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் வெளிப்படைத்தன்மை, நேர்த்தியான நடைமுறைகள், உயர் இலக்கு ஆகியவற்றை நோக்கமாக கொண்டு கடலோர காவல்படை முன்னெடுத்துச்செல்லுப்படும் என்று கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பேட்மிண்டன்

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் முனநளெந-இல் இன்று தொடங்கின.

ஒற்றையர் முதல் சுற்று ஆட்டங்களில் :

ஆடவர் பிரிவில் லக்ஷயா சென் - சீனாவின் புரயபெ ஞுர-ஐயும்,

மகளிர் பிரிவில் பி.வி.சிந்து – தாய்வானின் ீயை லுர ீழ-வையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூருவில் நாளை தொடங்குகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் 2 ஆவது போட்டி வரும் 24ஆம் தேதி புனேயிலும்,

3 ஆவது கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி மும்பையிலும் தொடங்குகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது